Registered as a News Paper · பக்கங்கள் 04 · விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · ஆனி 28 · [12-07-98] · திங்கட்கிழமை · ஓசை 144

## 1992இல் செல்வந்த நாடுகளுக்கு 10 கோடி பேர் இடம் பெயர்வு

கடந்த வருடம் 10 கோடி மக்கள் செல்வந்த நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் என ஐ நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகெங்குமுள்ள மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி சிறந்த வாழ்க்கையைத் தேடி பெருமளவில் இடம் பெயர்கின்றனர். இந்தப்போக்கு இன்னும் வளர்ச்சியடையும் என்று கடந்த செவ்வாயன்று வெளியிடப்பட்ட ஐ. நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ. நா. குடிசன நிதியத்தின் வருடாந்த அறிக்கை மக்களின் இடம் பெயர்வுகள் குறித்து இம்முறை கவனம் செலுத்தியுள்ளது. கடந்த வருடம் 10 கோடி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 1989இல் 5கோடி மக்களே இடம் பெயர்ந்தனர் என்று அறிக்கை கூறுகிறது. தத்தமது நாடுகளில் சித்திரவதைகளுக்கு அஞ்சித் தப்பியோடும் ஒரு கோடி 70 லட்சம் மக்களும் வன்செயல், வறட்சி, சூழல் அழிவு (4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசியலில் பாரிய மாற்றம்

# விரைவில் நிகழும் சாத்தியம் அதிகரிப்பு!

## பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக பந்துல குலதுங்கா நியமனம் பெற்றுள்ளார். இவர் ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஆணையாளராக கடமை ஆற்றியவராவார்.

தற்பொழுது இவரின் இடத்திற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் தலைவராக பணியாற்றிய ஆரிய சமரவீரா நியமனம் பெற்றுள்ளார்.

## அமைச்சரவையும் மாறலாம்!

## அரசியல் வட்டாரத்தில் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசியலில் ஓரிரு மாதங்களில் பாரிய மாற்றங்கள் நிகழலாம் என அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு அரசியற் கட்சிகளை ஐ. தே. கட்சியுடன் சேர்த்துக் கொள்ள பூரண அதிகாரத்தை ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிற்கு வழங்கியதைத் தொடர்ந்தே இம்மாற்றங்கள் விரைவில் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மாற்றங்கள் அமைச்சரவையிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் எனவும் அறியவருகிறது.

இவ்வாறு ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்ட பி.பி.ஸி. ஆளும் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்ளும் சாத்தியம் உருவாகி வருகிறதாகத் தெரிவித்தது.

பிரேமதாசாவின் கொலைக்குப் பின்னர் ''தேசிய அரசு'' என்ற அமைப்பை உருவாக்குவது என்ற பேச்சு பரவலாக அடிபட்டது. கடந்த வாரம் முதல் தென்னிலங்கையில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் யாவும் கட்சிகள் மீண்டும் இணைந்து கொள்ளும் என்றே எண்ணத்தோன்றுகிறது. இந்த மாற்றங்கள் எல்லாம் சிங்களக் கட்சிகளுக்கிடையிலேயே இடம்பெற உள்ளன.

பிரேமதாசா ஆளும்கட்சி மேல் கொண்டிருந்த அதிகார பலம் அவருக்கெதிராக சில அமைச்சர்களைத் தூண்ட வைத்தது இதனால் இவர்கள் அக் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியை அமைத்து பிரேமதாசா அரசுக்கு முக்கிய எதிரணியாக செயற்பட்டு வந்தனர்.

நாட்டின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தால் இவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளும் பறிக்கப்பட்டன. ஆனால் இன்று பிரேம (4ஆம் பக்கம் பார்க்க)

### ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக் கட்சி

## தீர்வை முன்வைக்கும் வரை பகிஷ்கரிப்பை கைவிடோம்

### தமிழ்க்குழுக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப் பிரச்சினைக்குரிய தீர்வாக தங்களது யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் பரிசீலனைக்கு முன்வைக்காதவரை தெரிவுக்குழுக் கூட்டப் பகிஷ்கரிப்பை தாங்கள் கைவிடப்போவதில்லை என தமிழ்க் கட்சிகள் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுவிடம் தெரிவித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களைப் பகிஷ்கரித்துவரும் இ. தொ. கா. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட இதர தமிழ்க் கட்சிகளின் சார்பில் தெரிவுக்குழுவில் இடம் பெற்ற உறுப்பினர்களை சபாநாயகர் பாராளுமன்றத்தில் உள்ள தமது காரியாலயத்துக்கு அழைத்து பேசினார்.

இந்தத் தெரிவுக் குழுவின் கூட்டங்கள் சீராக நடைபெற வேண்டுமானால் இப்பொழுது இந்தக் கூட்டங்களைப் பகிஷ்கரித்துவரும் சகல கட்சிகளும் தங்களது பகிஷ்கரிப்பைக் கைவிட்டுவிட்டு கூட்டங்களுக்குச் சமுகமளிக்க வேண்டுமென்று சபாநாயகர் பிரதிநிதிகளைக் கோரியதாக தெரியவருகிறது.

இப்பொழுது சமுகமளித்திருந்த கட்சிகளின் பிரதிநிதிகள் தங்களது மேற்படி நிலைப்பாட்டைத் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'கொத்து ரொட்டி' போடும் ஐ. தே. க. அரசாங்கம்

[கொழும்பு]

கடந்த 15 வருடங்களாக அரசாங்கம் செய்துவந்த அனைத்தும் ''கொத்து ரொட்டி'' போடும் வேலையாகவே இருந்துள்ளது என

கடையில் போடும்போது அது மூன்று மாடிக் கட்டடங்களுக்கப்பால் கேட்கும். அந்த மாதிரித்தான் இந்த அரசாங்கத்தின் வேலையும் எனத் தெரிவித்தார். வரவு - செல

## அமைச்சு மட்ட முயற்சியே பிரச்சினையைத் தீர்க்கும்

### -தொண்டமான்

[கொழும்பு]

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மட்டத்திலான நடவடிக்கையே வெற்றியளிக்கும் எனத் தான் நம்புவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

மேலும் அவர் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும்

தலைப்பிலான ஐந்து நாள் கருத்தரங்கு ஒன்றை கொழும்பு தாஜ் ஹோட்டலில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்; இன்று வடக்குக்

## டி. பி. விஜயதுங்காவிற்கு காமினி பாராட்டு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினிதிஸாநாயக்க பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அச்சமும் பீதியுமற்ற நியாயமான சமுதாயத்தைக்கட்டியெழுப்பும் நியாயமானபணியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார் என கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

## எல்லையோர தமிழ் கிராமங்களில்

சுதந்திரக் கட்சியும் இனப் பிரச்சினைக்குரிய தீர்வாக தங்களது யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் பரிசீலனைக்கு முன் வைக்காதவரை தெரிவுக்குழுக் கூட்டப் பகிஷ்கரிப்பை தாங்கள் கைவிடப்போவதில்லை என தமிழ்க் கட்சிகள் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதுவிடம் தெரிவித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பகிஷ்கரித்துவரும் இ. தொ. கா. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட இதர தமிழ்க் கட்சிகளின் சார்பில் தெரிவுக்குழுவில் இடம் பெற்ற உறுப்பினர்களை சபாநாயகர் பாராளுமன்றத்தில் உள்ள தமது காரியாலயத்துக்கு அழைத்து பேசினார்.

இந்தத் தெரிவுக் குழுவின் கூட்டங்கள் சீராக நடைபெற வேண்டுமானால் இப்பொழுது இந்தக் கூட்டங்களைப் பகிஷ்கரித்து சமுகமளிக்க வேண்டுமென்று சபாநாயகர் பிரதிநிதிகளைக் கோரியதாக தெரியவருகிறது.

இப்பொழுது சமுகமளித்திருந்த கட்சிகளின் பிரதிநிதிகள் தங்களது மேற்படி நிலைப்பாட்டைத் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

இவ்வாறு ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்ட பி.பி.ஸி. ஆளும் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்ளும் சாத்தியம் உருவாகி வருகிறதாகத் தெரிவித்தது.

பிரேமதாசாவின் கொலைக்குப் பின்னர் ''தேசிய அரசு'' என்ற அமைப்பை உருவாக்குவது என்ற பேச்சு பரவலாக அடிபட்டது. கடந்த வாரம் முதல் தென்னிலங்கையில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் யாவும் கட்சிகள் மீண்டும் இணைந்து கொள்ளும் என்றே எண்ணத்தோன்றுகிறது. இந்த மாற்றங்கள் எல்லாம் சிங்களக் கட்சிகளுக்கிடையிலேயே இடம்பெற உள்ளன.

பிரேமதாசா ஆளும்கட்சி மேல் கொண்டிருந்த அதிகார பலம் அவருக்கெதிராக அமைச்சர்களைத் தூண்ட வைத்தது இதனால் இவர்கள் அக் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியை அமைத்து பிரேமதாசா அரசுக்கு முக்கிய எதிரணியாக செயற்பட்டு வந்

நாட்டின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தால் இவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளும் பறிக்கப்பட்டன. ஆனால் இன்று பிரேம

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'கொத்து ரொட்டி' போடும் ஐ. தே. க. அரசாங்கம்

[கொழும்பு]

கடந்த 15 வருடங்களாக அரசாங்கம் செய்துவந்த அனைத்தும் ''கொத்து ரொட்டி'' போடும் வேலையாகவே இருந்துள்ளது என மக்கள் ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனா பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில்; ''கொத்து ரொட்டி'' ஒரு கடையில் போடும்போது அது மூன்று மாடிக் கட்டடங்களுக் கப்பால் கேட்கும். அந்த மாதிரித்தான் இந்த அரசாங்கத்தின் வேலையும் எனத் தெரிவித்தார். வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட சம்பள உயர்வை - இரண்டாவது கட்டம் - அரசாங்க ஊழியர்களுக்கு வழங்காது தடுககப்பட்டது இதுவே முதல்தடவை எனவும் குறிப்பிட்டார்.

## அமைச்சு மட்ட முயற்சியே பிரச்சினையைத் தீர்க்கும்

-தொண்டமான்

[கொழும்பு]

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சு மட்டத்திலான நடவடிக்கையே வெற்றியளிக்கும் எனத் தான் நம்புவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

மேலும் அவர் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் அழிவை ஏற்படுத்தி வரும் வடக்கு - கிழக்கு பிரச்சினை வெகுவிரைவில் தீர்க்கப்படும் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

''இலங்கையில் தொழிற்சங்கமும் ஜனநாயகமும்'' என்ற தலைப்பிலான ஐந்து நாள் கருத்தரங்கு ஒன்றை கொழும்பு தாஜ் ஹோட்டலில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்; இன்று வடக்குக் கிழக்கு நிலைமை சொல்லிலடங்காத துன்பதுயரங்களை நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் தந்துகொண்டிருக்கிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## டி. பி. விஜயதுங்காவிற்கு காமினி பாராட்டு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸாநாயக்க பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அச்சமும் பீதியுமற்ற நியாயமான சமுதாயத்தைக்கட்டியெழுப்பும் நியாயமானபணியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார் என கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

# எல்லையோர தமிழ் கிராமங்களில் இரவில் பதுங்கும் இராணுவம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் தமது முகாம்களிலிருந்து புறப்பட்டு அயலில் உள்ள தமிழ்க் கிராமங்களில் பதுங்கியிருக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரவு வேளைகளில் அல்லது அதிகாலைவேளைகளில் தமது முகாம்களிலிருந்து புறப்பட்டு வரும் இராணுவத்தினர் தமிழ் மக்கள் வாழும் எல்லைக் கிராமப் பகுதிகளில் பதுங்கியிருந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனராம்.

செட்டிகுளம் பிரதேசத்தில் பல இடங்களிலும், பம்பைமடு, மூனாமடு ஆகிய இடங்களிலும் இந்த நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் மூனாமடு என்ற இடத்தில் உள்ள காவல் கண்காணிப்பு முகாமிலிருந்து புதுக்குளம் வந்துசேர்ந்த படையினர் அங்கு பற்றைகளில் பதுங்கியிருந்து விட்டு மீளத் திரும்பிச் சென்றனர்.

இதே மாதிரி, பேயாடி கூழாங்குளம் முகாமிலிருந்து இரவோடிரவாக நகர்ந்துவரும் இராணுவத்தினர் நொச்சிமோட்டை, சின்னக்குளம் பகுதிகளில் பதுங்கியிருந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனராம் (தி)

# ரூமேனியாவில் கைதான 40 இலங்கையர் நிலையென்ன?

## மர்மமாக உள்ளதாக அதிகாரிகள் தகவல்

(கொழும்பு)

ரூமேனிய எல்லைக் காவல் படையினரால் கடந்த மாதம் ரூமேனியாவில் கைது செய்யப்பட்ட நாற்பது சிறிலங்காப் பிரசைகள் பற்றிய நிலை மர்மமாக உள்ளது என்று கொழும்பு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பத்து நாட்களுக்கு மேலாக இவர்களைப் பற்றிய விபரங்கள் எதுவும் கொழும்புக்கு எட்டவில்லை என்றும், ரூமேனியாவின் தலைநகரான புடாபாஸ்றில் உள்ள சிறிலங்கா தூதுவராலயத்தினாலும்இவர்களைப்பற்றிய தகவல் எதையும் அறியமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

17க்கும் 40 வயதுக்கும் உட்பட்ட இவர்கள் ரூமேனியா வடகிழக்கு நகர் ஒன்றிலிருந்து தலைநகர் புடாபாஸ்றுக்குள் நுழைய முயற்சித்தபோது ஜூன் 24 ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்டார்கள்.

கைதானவர்கள் மேற்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

கோட்டை கடற்பகுதியை நோக்கி தொடர்ந்து நான்கு நாட்களாக 11 மணியளவில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

மண்டைதீவுபகுதியில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரே இச்ஷெல் தாக்குதலை மேற்கொள்கின்றனர். பாரிய சத்தத்துடன் வெடிக்கும் இச் ஷெல்களின் ஓசை யாழ் போதனா மருத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல் குறித்து வியாபாரிகளிடம் விசாரணை

[நமது நிருபர்]

நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல் குறித்து நேற்றுக் காலை அப்பகுதிக்குச் சென்ற வியாபாரிகளிடம் இராணுவ அதிகாரி வினவியதாக தெரிவிக்கப்படுகிறது.

நொச்சிமோட்டை, சின்னக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளைத் தாக்கும் நோக்குடன் பதுங்கியிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தி அவர்களைப் பின்வாங்கச் செய்தது தெரிந்ததே.

நொச்சிமோட்டையிலிருந்து காவலரண் பகுதிக்கு வந்த சிறிலங்கா இராணுவ அதிகாரியே வியாபாரிகளிடம் இதுபற்றி விசாரித்துள்ளார்.

இவர் இராணுவத்தினர் தாக்குதலுக்கு தயாராகமறைந்திருந்த செய்தி எவ்வாறு புலிகளுக்குத் தெரியவந்தது என்பது குறித்தே இவர்களிடம் விசாரித்ததாக தெரியவருகிறது.

இதேவேளை இராணுவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரணசிங்கா மீது அரசாங்க கட்சி கண்டனம்

(கொழும்பு)

அரசின் கொள்கைகளைப் பகிரங்கமாகக் கண்டித்ததற்காகவும், கட்சியின் இரகசியங்களை தொடர்புச் சாதனங்களுக்கு வெளியிட்டதற்காகவும் ராஜாங்க தகவல் அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா அரச பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் கண்டிக்கப்பட்டார்.

அமைச்சர் ஒருவர் அரசின் கொள்கைகளைக் கண்டிப்பது. மக்கள் அரசின்மேல் உள்ள நம்பிக்கையைக் குறைத்து விடும் என்று அமைச்சர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சருடன் பல எம். பிக்களும் சேர்ந்துகொண்டு ராஜாங்கத் தகவல் அமைச்சரைக் கண்டித்துப் பேசியதாகத் தெரியவருகிறது.

கூட்டத்திற்கு தலைமை வகித்த ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா இப்படியான கருத்துக்களை நேரடியாகத் தனக்குத் தெரியப்படுத்துமாறும், இந்த விஷயங்களை ஆராய்வதற்கு பத்திரிகை ஏற்றதல்ல என்றும். இப்படியான விஷயங்களை கட்சியின் செயற்குழுவும் ஆராயலாம் என்றும் தெரிவித்தார்.

# போலி குடும்ப அட்டை சூத்திரதாரி கைது

(நமது நிருபர்)

போலி குடும்ப அட்டை மற்றும் அனுமதி அட்டை ஆகியவற்றைத் தயாரிக்கும் மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதி அட்டைகள் சிலவற்றில் காணப்பட்ட வித்தியாசமான தன்மையினை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இதன் சூத்திரதாரி நடேசு சத்தியநாதன் (வயது 37, இராசேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்) என அடையாளம் காணப்பட்டு விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது மோசடிச்செயலுக்கு போலியான ரபர் முத்திரைகள் மற்றும் பல சாதனங்களைப் பயன்படுத்தி உள்ளமை தெரியவந்துள்ளது.

பிரசுரிக்கப்பட்டுள்ள பிரசுரங்களிலிருந்து இவரது மோசடிச் செயலை தெரிந்தவர்கள் சத்தியநாதன் அல்லாது பிற

(4ஆம் பக்கம் பார்க்க)



## இராணுவத்தின் முயற்சி இயக்கச்சியில் முறியடிப்பு

இயக்கச்சிப் பகுதியில் உள்ள பண்ணை இராணுவக் காவல் அரணில் இருந்து முன்னேற முயற்சித்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# மனமுடைந்த நிலையில் கைதிகளின் பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

தமது பிள்ளைகளை விடுவித்து தம்முடன் அழைத்துச் செல்ல முடியாத நிலை குறித்து தாம் மிகவும் மனமுடைந்து போயுள்ளதாக யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்ததாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

தமது பிள்ளைகளை விடுவித்து தாம் வீடுசெல்ல உரிய சூழல் விரைவில் உருவாகும் என்று தாம் நம்புவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தம்மைக் கூட்டிச் செல்ல முடியாத சூழ்நிலை தோன்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒன்பது நாள் வளர்ந்த சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மகலிகாபதி'' மானிப்பாய், (5345)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆலங்கட்டை றோட், வெள்ளாவத்தை, பொலிகண்டி. கற்கண்டு மாமா சைக்கிள்கடை, பொலிகண்டி. (5331)

ஒரு பரப்பும் 2 குழியும் கொண்ட காணியில்வீடு ஒன்று கன்னாதிட்டி ஒழுங்கையில் விற்பனைக்குண்டு அதிதுடன் மின் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு தொடர்பு: லிங்கம் கூல் பார், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (5332)

Optima ஆங்கில தட்டெழுத்து இயந்திரம் Remington புதிய கீ போட், smith corona portable தட்டெழுத்து இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: G R மருதலிங்கம், 8/1E அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்நகர். (5836)

### தேவை

யாழ் நகர், நகரை அண்மித்த பகுதிக்குள் அலுவலக தேவைக்கு வீடு அல்லது கடை போன்ற இடம் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சோ. பிரபாகரன், நியூ சென்றல் பேக்கரி, 69, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம். (5302)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி-6968)

### தவறிவிட்டது

புவனேஸ்வரன் சாரதா அவர்களின் குடும்பஅட்டை, அடையாள அட்டை, நிவாரண அட்டை கூப்பன்கள் அடங்கிய பாக் ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5346)

## கடற்படை துப்பாக்கி சூடு மீனவர் தப்பினார்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து மீனவர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

நேற்று முன்தினம் இன்பருட்டி கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சரமாரியாகச் சுட்டதில் இன்பருட்டியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் யோகலிங்கம் (வயது 34) என்பவரே உயிர் தப்பியவராவர்.

மேலும் கடந்த இரண்டு தினங்களாக பகல் இரவாக கடற்படையினர் மீனவர்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். இதன் போது பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் என்ஜின்கள், மீன் வகைகள் பலவும் நாசமடைந்தன. இரவு வேளைகளில் வெளிச்சம் போட்டு மீனவர்களை கடற்படையினர் தேடி வேட்டுக்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க முடியாத அச்சநிலை உருவாகியுள்ளது. (யோ)

### விண்ணப்பம் ஏற்கப்படாது

(கொழும்புத்துறை)

யாழ். செயலக யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் 01 08-1954 ஆம் ஆண்டுக்குப் பின் பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாதென யாழ் மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு.அ.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (24)

## 2-ம் ஆண்டு நினைவு 12-7-1993



### ரவீந்திரன் மைதிலி

அன்னை மடியில் 01-02 1963 ஜேர்மன் மண்ணில் 03-07-1991

அன்பின் திருமகளே அசையாத மைதிலியே!
மலர்ந்த மல்லிகையே மறைந்ததேனம்மா?
வளர்த்த உள்ளங்கள் ஓயாது விம்முதலே!
மாதாவையும் மக்களையும் மறந்து விட்டு
கண்ணிறைந்தவனைக் கைவிட்டு
உடன்பிறந்தார் உள்ளங்களை புலம்ப விட்டு சென்றனையோ
ஈராண்டு சென்றாலும் பெற்றவளின் இருதயக்குமுறல் ஓயாது
விம்மல்களுடனே உன் ஆத்ம சாந்திக்கு நல்லூரானை வேண்டுகின்றோம்.

521, நல்லூர், யாழ்ப்பாணம். (5343) அம்மா, சகோதரர்கள் அன்ரிமார்.

## அந்தியேட்டியும் 31-ம் நாள் நினைவுதின

## வாழைச்சேனையில் பாதுகாப்பு அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பொலிஸ் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது அத்துடன் வாழைச்சேனை பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. பொலிஸ் நிலையம் தற்பொழுது பெற்றோல் நிலைய சந்தியில் உள்ள உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் கல்குடாவிற்கும் மாற்றப்பட்டுள்ளன.

இதேசமயம் பொலிஸ் நிலையம் இயங்கிய கட்டடத்தில் விசேடபுலனாய்வுப்பிரிவுஒன்று திறக்கப்பட உள்ளது வாழைச்சேனை பகுதியில் பலபொலிஸ் காவல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ரயில் பாதை விஸ்தரிப்பு நெற்காணிகள் சுவீகரிப்பு

(மட்டக்களப்பு)

ஈரான் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மட்டக்களப்பு - பொத்துவில் ரயில் பாதைக்கான உத்தேச வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி ரயில்பாதை விஸ்தரிப்பினால் நெற்செய்கைக் காணிகள் பலவற்றை விவசாயிகள் இழக்கவேண்டியுள்ளனர்.

ரயில் பாதை விஸ்தரிப்பினால் காரைதீவு பிரதேச செயலக எல்லையினுள் 2.76 ஹெக்ரேயர் நெற்காணி சுவீகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கத்திக்குத்து

இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி இறுதியில் கத்திகுத்தில் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் சங்கத்தானைப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இச் சம்பவத்தில் சங்கத்தானையைச் சேர்ந்த இ. கந்தசாமி (40) என்பவரே வயிற்றில் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (86)

### முதலுதவி வகுப்பு

யாழ் மாநகர சபை யுனிசெவ் உதவியுடன் ஒவ்வொரு வட்டாரங்களிலிருந்தும்தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு சுகாதார தொண்டர் பயிற்சி வகுப்புக்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் யாழ். மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் ஆரம்பித்து நடாத்திவருகின்றது.

ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் மூன்று பேர் வீதம் இவ்வகுப்பில் கலந்துகொண்டு வருகிறார்கள்.

இவர்களுக்கான முதலுதவி வகுப்புகள் இன்று யாழ். மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## தொண்டர் நிறுவனங்கள் வாக்குறுதி மீறிவிட்டன

### வாழைச்சேனை அகதிகள் கவலை

(மட்டக்களப்பு)

பலநிறுவனங்களும் தொண்டர் ஸ்தாபனங்களும் எங்களை வந்து பார்க்கும் போதெல்லாம் இருப்பிடத்திற்கு புதிய கொட்டில்கள் அமைத்து தருகின்றோம். கிணறு மலசலகூடம் அமைத்து தருவதுடன் உங்கள் துயர்துடைக்க பாடுபடுவோம் என கூறுகின்றனரே தவிர செயலில் எதுவும் நடைபெறுவதில்லை. எங்கள் துயரம்தான் நீண்டு செல்கிறது என வாழைச்சேனை பகுதி அகதிகள் தெரிவித்துள்ளனர்.

எம் இருப்பிடத்தை பார்வையிட்ட சர்வதேச தொண்டர் ஸ்தாபனம் கிழக்கிலங்கை புனர்வாழ்வு கழகம் குவிக்கர் பீஸ் அமைப்பு என்பன எமது அடிப்படை பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தருவதாக வாக்குறுதி அளித்து சென்று பலமாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் இதுவரை எதுவும் நடைபெறவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## யாழ் மாவட்ட பாடசாலை வலை பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான மாவட்ட நிலை வலைபந்தாட்டச்சுற்... மெதடிஸ்த மகளிர் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் ம. ம. வி. யும் விளையாடும்.

வேம்படி மகளிர் கல்லூரி

## விஜேவீராவின் தாயார் மாத்தறைக்கு மாற்றம்

(கொழும்பு)

கொல்லப்பட்ட ஜே. வி. பியின் தலைவர் ரோகண விஜேவீராவின் தாயார்சுகவீனமுற்ற நிலையில் திருமலை கடற்படை தளத்திலிருந்து மாத்தறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவர் மாத்தறையில் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விஜேவீரா காலமானதும் அவரின் குடும்பத்தினர் பாதுகாப்புக்கருதி அரசினால் திருமலை கடற்படை தளத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

## மொகிதீனின் சொத்து; பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை தொடர்பாக விசாரிக்கும் இரகசியப் பொலிஸார் அவரின் உதவியாளரும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவரான மொகிதீனின் சொத்துக்கள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

மொகிதீனின் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரும் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்படுவர் இவர்களின் சொத்து விபரமும் கண்டறியப்படும்.

### டைனமோ திருட்டு

யாழ். பல்கலைக்கழகத்தில் விடப்படும் துவிச்சக்கர வண்டிகளிலிருந்து டைனமோகழற்றி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களாக இத்திருட்டு அதிகரித்து வருவதாகவும், பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் விரிவுரையாளர்களின் துவிச்சக்கர வண்டிகளிலிருந்து கூட இவை கழற்றி எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

### உதவிப்பண கொடுப்பனவு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள தபாலகங்கள், உபதபாலகங்கள் மூலம் புற்றுநோய், காசநோய், தொழுநோய், ஆனிமாத உதவிப் பணக் கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் தெல்லிப்பழை உதவி அரச அதிபரினால் எடுக்கப்பட்டுள்ளன.

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-12

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் (மன்னார், விடத்தல்தீவு) பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **ஜெயா** (இராமச்சந்திரன் ஜெயசுந்தரம் - பெரிய புல்லுமலை - மட்டு)

அம்பாறை - எருவில் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நகுலன்** (இளையதம்பி அருளானந்தம் - இன்ஸ்பெக்டர் ஏற்றம், பொத்துவில் 03 - அம்பாறை)

**சந்திரன்** (இ. சந்திரன் - அக்கரைப்பற்று - அம்பாறை)

வல்வெட்டித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுந்தர்** (நாகராசா தியாகசீலன் - செல்வபுரம், (முல்லைத்தீவு)

வல்வை வெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். சலீம்** (சண்முகசுந்தரம் அரவிந்தன் - கரணவாய் தெற்கு கரவெட்டி - யாழ்)

**ஞானி** (நல்லதம்பி சிவஞானம் ''அசுபதிவாசா'' மத் தொனி, கரவெட்டி - யாழ்)

யாழ் - நெல்லியடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். டெனிஸ்** (பரமரட்சகபாலன் அனுரா - லெப். கேணல் பொன்னம்மான் வீதி, யாழ்)

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ். நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6968)

## தவறிவிட்டது

புவனேஸ்வரன்சாரதா அவர்களின் குடும்பஅட்டை, அடையாள அட்டை, நிவாரண அட்டை கூப்பன்கள் அடங்கிய பாக் ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாடும் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5346)

## உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும் டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-6931)

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ் நாயன்மார் கட்டு அருள்மிகு இராச இராசேஸ்வரி பேய்ச்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்குக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் விசேட அபிஷேகம், பூசைஆராதனை வழிபாடுகள் நடைபெறும். (24)

## நிதி திரட்ட நடவடிக்கை

யாழ். மாநகாசபை சனசமூக நிலையங்களின் சம சத்தி நிகிப்பற்றாக்குறை நிலவுவதாகவும, இதனை நிவர்த்திக்கும் நோக்குடன் ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலிருந்தும் நிதி திரட்டும் நோக்குடன் ஒவ்வொரு சனசமூக நிலையங்களின்கீழ்வாழும் நலன்விரும்பிகளின் உதவியைக் கோரவுள்ளதாகவும் சமாசம் தெரிவித்துள்ளது.

இதற்கு உதவியாக ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலிருந்தும் குறைந்தபட்சம் ஐந்து பேரைத் தெரிவுசெய்து அனுப்புமாறு சமாசப சனசமூக நிலையங்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. (17)

# ரவீந்திரன் மைதிலி

அன்னை மடியில் 01-02-1963 — ஜேர்மன் மண்ணில் 03-07-1991

அன்பின் திருமகளே அசையாத மைதிலியே!
மலர்ந்த மல்லிகையே மறைந்ததேனம்மா?
வளர்த்த உள்ளங்கள் ஓயாது விம்முதலே!
மாதாவையும் மக்களையும் மறந்து விட்டு
கண்ணிறைந்தவனைக் கைவிட்டு
உடன்பிறந்தார் உள்ளங்களை புலம்ப விட்டு சென்றனையோ
ஈராண்டு சென்றாலும் பெற்றவளின் இருதயக்குமுறல் ஓயாது
விம்மல்களுடனே உன் ஆத்ம சாந்திக்கு நல்லூரானை வேண்டுகிறோம்.

521, நல்லூர்,
யாழ்ப்பாணம். (5343)

அம்மா, சகோதரர்கள் அன்ரிமார்.

# அந்தியேட்டியும் 31-ம் நாள் நினைவுதின மதியபோசன அழைப்பும்



## திருமதி ஏ. மனோன்மணி

(வலவெட்டித்துறை திரு. சி வெங்கடாசலம் மகள்)

பிறப்பு: 18-08-1918 — இறப்பு: 14 06-1993

பருத்தித்துறை மு ஏரம்பமூர்த்தி மனோன்மணியின் அந்தியேட்டி, 14-7-1993 புதன்கிழமை காலை 7 மணிக்கு, புலோலி மேற்கு எரிஞ்சம்மன் கோவிலடியில் நடைபெறும்.

மத்தியானம் 12 30 மணி அளவில் எங்கள் இல்லத்தில் மதியபோசன உபசாரம் ஆரம்பமாகும்.

இதில் கலந்துகொள்ளுமாறு, உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் தாழ்மையாக அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர்: மு. ஏரம்பமூர்த்தி
பிள்ளைகள்: ஏ சந்திரன், ஏ வசந்தன் ஏ. ஆனந்தன் சி. சந்திரமணி, சி வசந்ததேவி, க ஆனந்தி
மருமகன்: சோ. கணேஸ் [சாவகச்சேரி இலங்கை வங்கி]
பேரப்பிள்ளைகள்: சி சிவசுப்பிரமணியம் சி. மணிவண்ணன் [யாழ்.ப. க.வளாக வைத்தியத்துறை மாணவன்]

கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (5294)

பல நிறுவனங்களும் தொண்டர் ஸ்தாபனங்களும் எங்களை வந்து பார்க்கும் போதெல்லாம் இருப்பிடத்திற்கு புதிய கொட்டில்கள் அமைத்து தருகின்றோம். கிணறு மலசல கூடம் அமைத்து தருவதுடன் உங்கள் துயர் துடைக்க பாடுபடுவோம் என கூறுகின்றனரே தவிர செயலில் எதுவும் நடைபெறுவதில்லை. எங்கள் துயரம்தான் நீண்டு செல்கிறது என வாழைச்சேனை பகுதி எம் இருப்பிடத்தை பார்வையிட்ட சர்வதேச தொண்டர் ஸ்தாபனம் கிழக்கிலங்கை புனர்வாழ்வு கழகம் குவிக்கர் பீஸ் அமைப்பு என்பன எமது அடிப்படை பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தருவதாக வாக்குறுதி அளித்து சென்று பலமாதங்கள் கடந்து விட்டன. ஆனால் இதுவரை எதுவும் நடைபெறவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## யாழ் மாவட்ட பாடசாலை வலை பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான மாவட்ட நிலை வலைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை அச்சுவேலி புனித திரேசா கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் 17வயது பிரிவில் இளவாலை மெய்கண்டானை எதிர்த்து மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் 19 வயது பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து வட இந்துமகளிர் கல்லூரியும் மெதடிஸ்த மகளிர் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் ம. ம. வி. யும் விளையாடும்.

வேம்படி மகளிர் கல்லூரியில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் 17 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் ம வி எதிர்த்து யூனியன் கல்லூரியும் 19 வயது பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும் விளையாடும்.

விற்பனைக்கு

## கண்ணாடி சோக்கேஸ் (அலுமாரிகள்)

நல்ல நிலையில் உள்ள மூன்று கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. கடமை நேரத்தில் வந்து பார்வையிடலாம். அரக்கு முத்திரை இட்ட கூறு விலைகள் 25-07-93வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம்
தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை.
(5312)

தரத்தில் உயர்ந்தது — சுவை மிகுந்தது

சுத்தமான பசும் பாலைக் கொண்டு வன்னிப் பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட

## "சிந்து பால் வெல்லம்"

கொள்வனவு செய்வதற்கு நீங்கள் நாடவேண்டிய முகவரிகள் :-

1. கொக்குவில் மொத்த விற்பனை நிலையம்
2. உதயம் பல் பொருள் அங்காடி (ஆரியகுளம் சந்தி)

இத்துடன்

மாட்டு வற்றலையும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 160/-

(சி-6994)

★ **ஜெயா** (இராசசந்திரன் ஜெயசுந்தரம் - பெரிய புல்லுமலை - மட்டு)

அம்பாறை - எருவில் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நகுலன்** (இளையதம்பி அருளானந்தம் - இன்ஸ்பெக்டர் ஏற்றம், பொத்துவில் 03 - அம்பாறை)

**சந்திரன்** (இ. சந்திரன் - அக்கரைப்பற்று - அம்பாறை)

வல்வெட்டித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சுந்தர்** (நாகராசா தியாகசீலன் - செல்வபுரம், முல்லைத்தீவு)

வல்வை வெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். சலீம்** (சண்முகசுந்தரம் அரவிந்தன் - கரணவாய் தெற்கு கரவெட்டி - யாழ்)

**ஞானி** (நல்லதம்பி சிவஞானம் ''அசுபதிவாசா'' மத்தொனி, கரவெட்டி - யாழ்)

யாழ் - நெல்லியடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். டெனிஸ்** (பரமரட்சகபாலன் அனுரா - லெப். கேணல் பொன்னம்மான் வீதி, யாழ்)

யாழ் - அச்சுவேலி - வளலாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**குட்டிக்கண்ணா** (சுவாமிநாதன் கரிகரன் - தாவடி வீதி, சுதுமலை - யாழ்)

யாழ் - திருநெல்வேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**சரளன்** (சிவசுப்பிரமணியம் தனஞ்செயன் - காங்கேசன் துறை வீதி, கோண்டாவில் - யாழ்)

பருத்தித்துறை - சக்கோட்டை புனிதசேவியர் தேவாலயத்தின் மீது பருத்தித்துறை முகாமில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, பெண் குழந்தை உட்பட மூன்று தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ **றோய்** (சிறிதரன் மரியதாஸ் - மன்னார்)

முல்லைத்தீவு - மாங்குளம். வவுனிக்குளம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நீர்ப்பாசனத்திணைக்கள அலுவலகரான சிலாவத்துறையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மன்னார் - தள்ளாடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். மில்டன்** (கிருஷ்ணபிள்ளை தேவகுமார் - தர்மபுரம் - கிளிநொச்சி)

**பாரதி** (செபஸ்ரியான் பாலஅந்தோனி - 11-ம் படிவம், தர்மபுரம் - கிளிநொச்சி)

**கலைஞன்** [தங்கராசா சுரேஸ் - சிவன்கோயில் வீதி]

மன்னார் - மாந்தை சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். வேதமணி/செட்டி** (அப்புச்சாமி செட்டியாண்டி - ஆசங்கங்குளம், வட்டக்கண்டல்- மன்னார்)

**2 ம் லெப். மயூரன்** [சண்முகநாதன் சந்திரகுமார் - விநாயகபுரம், முழங்காவில்- மன்னார்]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவன் உட்பட மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த 4 தமிழர்கள்.

திருமலையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03-ம் கட்டை அரசினர் பாற்பண்ணை ஊழியர்களான 5 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6991)

## சிந்தனைக்கு

என் அண்டை வீட்டுக்காரனை புறக்கணித்து தொலைவில் உள்ளவர்களுக்கு தொண்டு செய்ய முன் வரக்கூடாது.

— காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தீக்குளிக்கும் 'கடமைவீரர்'

தமிழ் அரச ஊழியர்களின் மேலிட விசுவாசம் பிரபலம் மிக்கது. மேலிடம் ஆங்கிலேயராக இருந்தால் என்ன, சிங்களவராக இருந்தால் என்ன? இவர்கள் நன்றியுடையவர்களாக செயல்படுவதில் சளைக்காதவர்கள். சில விடயங்களில் ''சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்க மாட்டார்'' என்பது போல் செயற்படுபவர்கள். இதனால், மேலிடத்தின் விருப்புணர்ந்து செயற்படும் அதிகாரிகளாக விளங்குபவர்கள். இந்தவரிசையில், நிதி அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் முதன்மையானவர்.

திரு. பாஸ்கரலிங்கம், சிங்களப் பேரினவாதம் தமிழருக்கு எதிராக அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள போதும், அரசிற்கு விசுவாசமாக இருந்தவர். தனது குடும்பத்திற்கு, கொழும்பில் பாதுகாப்பு இல்லை என்ற நிலையில் சென்னையிலும், லண்டனிலும் அவர்களை குடியமர்த்தி விட்டு கொழும்பில் தங்கியிருந்து கடமை புரிபவர். ''சிங்கள அரசிற்குப் பணி செய்து கிடப்பதே எனது கடன்'' என்ற 'உயரிய' இலட்சியம் கொண்டவர்.

இவ்வாறாக, திரு.பாஸ்கரலிங்கம் சேவை செய்வதன் மூலம், அவர் தன்னை தமிழன் என்பதற்கு அப்பால், ஒரு விசுவாசம் மிக்க ஊழியராகக்காட்ட முற்படலாம். அவ்வாறும் கருதலாம். ஆனால், திரு. பாஸ்கரலிங்கத்தைப் பொறுத்து, முதலில் தமிழர், பின்னரே அரச ஊழியர் என்பதே சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடாகும். தனது சேவையால் பௌத்த பேரினவாதத்தின் சிந்தனையில் பாஸ்கரலிங்கத்தினாலோ, அன்றி வேறு லிங்கங்களினாலோ மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியவில்லை.

திரு. பாஸ்கரலிங்கத்தின் மீதான இக்காழ்ப்பும், வெறுப்பும் சிங்கள பேரினவாதிகளிடம் இன்று மட்டும் ஏற்பட்டதல்ல. நீண்ட காலமாகவே சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்தது. ஆனால், இது தனியாக பாஸ்கரலிங்கத்தின் மீதானதல்ல. ஒட்டுமொத்தமாக தமிழர் மீதானது. பல வருடங்களுக்குமுன், பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் இக்காழ்ப்புணர்வின் வெளிப்பாடாகக் குறிப்பிட்டார்: ''இலங்கையை இன்று மூன்று லிங்கங்களே ஆள்கின்றன''

# யாழ். குடாநாட்டு விவசாயியும் அவனது பிரச்சினைகளும்

## ஒரு சமகால நோக்கு

யாழ் குடாநாட்டின் நிலப்பரப்பில் 38 சத விகிதம் விவசாய விளைபூமியாக உள்ளது. இதில் நெற்செய்கையும், காய்கறி வகைகள் மற்றும் குரக்கன், பயறு போன்ற சிறுதானியப் பொருள்கள், காசுப்பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் ஆகிய பொருள்கள் அடங்கிய ஒரு விவசாய ஏற்பாடுகள் மரபு வழியாகச் செய்யப்பட்டுவருகின்றன. இவற்றுள் இன்று கணிசமான விளை நிலங்கள் இராணுவ நடவடிக்கைப் பிரதேசததுக்குள் அடங்கிய இடமாகிவிட்டது. எனினும் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் நெற்செய்கைமுழுமையாகவும், வலிகாமம் பகுதிகளில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில்நெற்செய்கையும் காய்கறி மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையும் இன்று இடம்பெறுகின்றன.

### விவசாயத்துக்கான உள்வீடுகள்

உள்வீடுகள் என்று இங்கு குறிப்பிடும்போது உரம் முதல் கிருமிநாசினி, விதை நெல், காய்கறி விதைகள், விதை உருளைக்கிழங்கு, எரிபொருள், கடன்வசதி என்பன அடங்கும்

### உரம்

2 உரத்தைப்பொறுத்த அளவில் இங்கு கமநல சேவைத் திணைக்களமே இதன் பெரும் பகுதியை கையாளுகின்றது. ஆனால் சில ஆண்டுகளில் வட பகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சமாஜம் உள்ளடங்கிய கூட்டுறவுச்சமாசம் பெரு முயற்சி எடுத்து உர விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது. போர்க்காலச் சூழ்நிலை ஆரம்பமாகுமுன்பு கொழும்பிலிருந்து உரம் மிகச் சுலபமாக இங்கு கொண்டுவரப்பட்டது.

கமநல சேவைத் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுகின்ற சில சுற்றறிக்கைகளினாலும் விநியோகம், விலை நிர்ணயம் போன்ற விடயங்களிலும் இன்றும் ஒரு தெளிவற்ற நிலைதான் காணப்படுகின்றன

கமநலசேவை திணைக்களம், கூட்டுறவு சமாசம் இருபகுதியினரும் கடல்மார்க்கமாக கொண்டு வந்து, கமநல சேவைகள் நிலையங்களின் ஊடாகவும் கூட்டுறவுக்கிளைகள் மூலமாகவும் [முறையே] விநியோகம் செய்யப்படுகின்றது. ஆனால் இதில்விவசாயிகளுக்கு மிக தேவைப்படுகின்ற யூரியா இங்கு கொண்டு வர அனுமதியில்லை. அதற்கு ஈடாகஅமோனியம் சல்பேட்டை மூலகமாகக் கொண்ட மற்ற உரங்கள்

திியோகத்தர்களது போக்குவரத்துச் செலவு என்பது கூட அடங்கும். ஆனால் விலை நிர்ணயத்தைப் பொறுத்தவரை விவசாயி ஒவ்வொருவரும், விலை நிர்ணயத்தில் ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் செலவீனங்களை அறிய வாய்ப்பு அளிக்க வேண்டும். இன்று வரை இந்த விடயம் சாதாரண ஒரு விவசாயியைப் பொறுத்தவரை பெரிய ஒரு மூடுமந்திரமாகவே உள்ளது. இந்நிலை நிச்சயம் மாறவேண்டும்.

4. முன்பு ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும், உரக்கூட்டுத்தாபனம் நிபந்தனையின் பேரில் இரண்டு லட்சம் ரூபா கடன் உச்ச வரம்பு விதித்து உரக் கொள்வனவுக்கு கடன் வசதி அளித்தனர். இப்பொழுது அந்நிலை ரத்துச் செய்யப்பட்டு விட்டது எனக் கூறப்படுகின்றது. மீண்டும் பழையபடி இந்தச் சலுகையை சகல கூட்டுறவுச் சங்கங்களும் பெற அரச அதிபர் மட்டத்தில் முயற்சி செய்து வெற்றி பெற்றால், உரம் விநியோகிக்கும் விடயத்தில் எவருக்கும் ஏக போக உரிமை என்பது இல்லா தொழியும்.

### விதை நெல்லு

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை சாதாரண விவசாயி கூட தனது விளைச்சலில் தரமான நெல்லை விதை நெல்லாக சேர்த்து வைக்கும் வழக்கமுடையவனாகக் காணப்படுகின்றான். ஆகவே கமநலசேவை திணைக்களமோ விவசாய இலாகாவோ பெரும் சிரமம் எடுத்து இங்குகொண்டு வரும் விதை நெல்லு சில சமயங்களில் விற்பனையாகாமல் களஞ்சியங்களில் தேங்கி இருப்பது வழமையாகிவிட்டது. ஆனால் 1992-ம் கால மழை பொய்த்ததால் கூடுதல் நெல்லையோ, தரமான விதைத் திறன் கொண்ட நெல்லையோ விவசாயிகள் பெற முடியாமல் போய்விட்டது.

5 ஆகவே பொறுப்பு வாய்ந்த திணைக்கள அதிகாரிகள் உரிய நேரத்தில் அதாவது 1993 ஆகஸ்ட் மாதத்தில் விதைக்கத்தக்கதாய் விதை நெல்லை இங்கு கொண்டு

ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

1993ஆம் ஆண்டும் இதே ஊக்குவிப்பை அவர்கள் விவசாயிகளுக்கு அளிப்பார்கள் என விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்ப்பது வியப்பல்ல.

### எரிபொருள்

7. 1990 யூன் மாதம்முதல் மண்ணெண்ணெய்இன்றுவரை கிடைத்தற்கரிய பொருளாகவே உள்ளது. 1993 மார்ச் மாதம் யாழ் குடா நாட்டுக்கு மாதம் 5000 பரல் மண்ணெண்ணெய் இங்கு அனுப்பப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு இதுவரை முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை.

அவ்வாறு முறையாக 5000 பரல் மண்ணெண்ணெய்நிச்சயமாக இங்கு வருகின்ற சாத்தியமுண்டாயின், விவசாய இலாகா, பிரிவுச் செயலர்கள் தத்தமது கிராமிய மட்ட உத்தியோகத்தர்கள் உதவியின்படி உண்மையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரை இனம் கண்டு பட்டியல் தயாரித்து ஒவ்வொரு மாதமும் எவ்வளவு எரிபொருள் தேவை என நிச்சயமான ஒரு அறிக்கையை தயாரித்து புனர்வாழ்வுப் பகுதியின் அதிகாரிகளோடு இணைந்து விநியோகத் திட்டத்தை சீராக்க வேண்டும்.

